# தொடக்கப்பள்ளி
## ஆண்டிறுதித் தேர்வு
## கட்டுரை

பெயர் : ____________________

நேரம் : 40 நிமிடங்கள்


வகுப்பு : தொடக்கநிலை ______

மதிப்பெண்கள் : ____ / 20

Setter : [illegible]

---

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக்கொண்டு <u>60 சொற்களுக்குக்</u> குறையாமல் ஒரு கட்டுரை எழுது. படத்தின் அடியில் உதவிச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீ அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.



| | |
|---|---|
| இடைவேளை | சாப்பிட்ட தட்டை |
| பணப்பையை | ஆசிரியர் |
| உணவு வாங்கி | வைத்துக்கொண்டார் |
| மேசையில் | திரும்பி வந்து |
| மறந்து | கண்டித்து |

# தொடக்கப்பள்ளி

## தமிழ் மொழி ஆண்டிறுதித் தேர்வு

## தாள் 2 – 2013

/ 50

பெயர்: ____________________ மதிப்பெண்கள்:

வகுப்பு : 3/_____ தேதி : ______________

¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤ ¤

பெற்றோர் கையொப்பம் : ____________________

தேதி : ____________________

1.சொற்பொருள்

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட சொல்லின் பொருளை உணர்த்தும் மிகச் சரியான விடையைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது . ( 5 ம.எ. )

1. நகுலன் பல வண்ணங்களில் பென்சில்களை வாங்கினான் .

1. வடிவங்களில்
2. வழிகளில்
3. நிறங்களில்
4. செயல்களில் ( )

2. பூனையின் மிருதுவான ரோமத்தைச் சிறுவன் தொட்டான் .

1. மென்மையான
2. உறுதியான
3. கூர்மையான
4. அழகான ( )

3. குறிஞ்சி மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் .

1. வருடங்களுக்கு
2. மாதங்களுக்கு
3. வாரங்களுக்கு
4. நாட்களுக்கு ( )

4. மயிலின் அழகை அனைவரும் கண்டு களித்தனர் .

1. சிரித்தனர்
2. பேசினர்
3. மகிழ்ந்தனர்
4. கழித்தனர் ( )

5. பானையின் துளை வழியாக நீர் ஊற்றிக் கொண்டிருந்தது .

1. ஓரம்
2. விரிசல்
3. ஓட்டை
4. கைப்பிடி ( )

## 2. செய்யுள் / பழமொழி

கீழ்க்காணும் செய்யுளை / பழமொழியை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான மிகச் சரியான விடையைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது . ( 5 ம.எ. )

6. __________ கரவேல் .

1. இயல்வது
2. நன்றி
3. ஈவது
4. ஆறுவது ( )

7. __________ விளம்பேல் .

1. ஏற்பது
2. உடையது
3. சினமது
4. தந்தை தாய் ( )

8. வைகறை துயில் __________ .

1. பேசேல்
2. மற
3. பேண்
4. எழு ( )

9. __________ இகழேல் .

1. அறிவுரை
2. எண்ணெழுத்து
3. ஓதுவது
4. ஆறுவது ( )

10. __________ இட்டு உண் .

1. ஐயம்
2. அறம்
3. ஊக்கம்
4. ஔவியம் ( )

3. வேற்றுமை உருபுகள்

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான மிகச் சரியான விடையைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது . ( 5 ம.எ. )

11. பிற்பகல் மணி __________ வகுப்புகள் முடிவடைந்தன .

1. மூன்றின்
2. மூன்றால்
3. மூன்றுக்கு
4. மூன்றில் ( )

12. விமலன் தன் __________ பள்ளிக்கு வந்தான் .

1. நண்பனுக்கு
2. நண்பனிடம்
3. நண்பனை
4. நண்பனோடு ( )

13. தரையில் கிடந்த __________ பணிப்பெண் ஒழுங்காக அடுக்கி வைத்தாள் .

1. பொருட்களோடு
2. பொருட்களுக்கு
3. பொருட்களை
4. பொருட்களால் ( )

14. கதாநாயகன் __________ ஒரு போர் வீரராக நடித்தார் .

1. நாடகத்தில்
2. நாடகத்தை
3. நாடகத்தின்
4. நாடகத்துக்கு ( )

15. தொடர்ந்து பெய்த __________ வெள்ளம் ஏற்பட்டது .

1. மழையால்
2. மழைக்கு
3. மழையின்
4. மழையை ( )

## 4. மூவிடப் பெயரும் வினையும்

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான விடையைக் கொண்டு நிரப்புக . ( 10 ம.எ. )

16. மாணவி கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டாள் .

_______________ கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டாய் .

17. விபத்து நடந்த இடத்தில் மக்கள் கூடினார்கள் .

விபத்து நடந்த இடத்தில் நாங்கள் _______________ .

18. பள்ளி மண்டபத்தில் ஆசிரியர்கள் உரை நிகழ்த்தினார்கள் .

பள்ளி மண்டபத்தில் தலைமையாசிரியர் உரை _______________ .

19. எலி அலமாரிக்குப் பின்னால் ஓடி ஒளிந்தது .

_______________ அலமாரிக்குப் பின்னால் ஓடி ஒளிந்தேன் .

20. சிங்கம் இரை தேடி அலைந்தது .

காட்டு விலங்குகள் இரை தேடி _______________ .

## 5.தெரிவுவிடைக் கருத்தறிதல்

கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படிக்கவும் .

ஒரு கொக்கும் காக்கையும் நண்பர்களாக இருந்தன . அவை தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன . மற்ற பறவைகளிடமிருந்து வரும் ஆபத்திலிருந்து காக்கையைக் கொக்கு காப்பாற்ற வேண்டும் . அதே போல மனிதனிடமிருந்து வரும் ஆபத்திலிருந்து கொக்கைக் காக்கை காப்பாற்ற வேண்டும் என்று இரண்டும் முடிவு செய்தன .

ஒருநாள் வயலுக்குச் சொந்தக்காரன் வயலைப் பார்க்க வந்தான் . அங்கிருந்த கொக்கு அவனைக் கவனிக்கவில்லை . ஆனால் காக்கை அவனைப் பார்த்துவிட்டது . அது சத்தமாகக் கரைந்தது . " நண்பா ! வயலுக்குச் சொந்தக்காரன் வருகிறான் , தப்பித்துச் செல் ," என்று அது கொக்கை எச்சரித்தது . கொக்கு பறந்து சென்றது . வயலுக்குச் சொந்தக்காரனுக்கு ஒரே ஆத்திரம் . எப்படியாவது காக்கையைப் பிடிக்க வேண்டும் என்று அவன் முடிவு செய்தான் . அதற்காக அவன் ஒரு சூழ்ச்சி செய்தான் .

கீழ்க்காணும் வினாக்களுக்கு உரிய மிகப் பொருத்தமான விடையின் எண்ணை அடைப்பினுள் எழுது . ( 5 ம.எ. )

21. ஒப்பந்தப்படிக் கொக்கு என்ன செய்ய வேண்டும் ?

1. கடைசி வரை காக்கையுடன் நட்பாக இருக்க வேண்டும்
2. பறவைகளிடமிருந்து காக்கையைக் காக்க வேண்டும்
3. மனிதர்களிடமிருந்து காக்கையைக் காக்க வேண்டும்
4. மனிதர்களுடன் நட்பாக இருக்க வேண்டும் ( )

22. காக்கை கொக்குக்கு என்ன உதவி செய்ய வேண்டும் ?

1. கொக்குக்கு உணவு கொண்டு வர வேண்டும்
2. மற்ற பறவைகளைக் கொல்ல வேண்டும்
3. மற்ற பறவைகளிடமிருந்து காப்பாற்ற வேண்டும்
4. மனிதர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும் ( )

23. வயலுக்குச் சொந்தக்காரன் எதற்காக வந்தான் ?

1. கொக்கைப் பிடிக்க
2. காக்கையைப் பிடிக்க
3. வயலைப் பார்க்க
4. நண்பனைப் பார்க்க ( )

24. காக்கை ஏன் சத்தமாகக் கரைந்தது ?

1. கொக்கை எச்சரிக்க
2. வயலுக்குச் சொந்தக்காரனை எச்சரிக்க
3. மற்ற பறவைகளை எச்சரிக்க
4. மனிதர்களை எச்சரிக்க ( )

25. வயலுக்குச் சொந்தக்காரன் எதற்காக சூழ்ச்சி செய்தான் ?

1. கொக்கைப் பிடிக்க
2. காக்கையைப் பிடிக்க
3. அனைத்து பறவைகளையும் பிடித்து விற்க
4. கொக்கையும் காக்கையையும் பிடித்து விற்க ( )

## 6. முன்னுணர்வுக் கருத்தறிதல்

கீழ்க்காணும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான விடையின் எண்ணை அடைப்பினுள் எழுது . ( 5 .எ. )

ஒரு நாள் விநோத் பள்ளியை நோக்கிச் சென்று கொண்டிருந்தான் . அவன் பள்ளி செல்லும் வழியில் பார்வையற்ற ஒருவர் 26. (______) கடக்க நின்று கொண்டிருந்தார் . சாலையில் 27. (______) வேகமாகச் சென்று கொண்டிருந்தன . விநோத் பார்வையற்றவரிடம் “ நான் உங்களுக்கு 28. (______) செய்கிறேன் ,” என்றான் . பார்வையற்றவர் மகிழ்ச்சியுடன் தன் 29. (______) நீட்டினார் . விநோத் பார்வையற்றவருடன் சாலையின் 30. (______) அடைந்தான் . பார்வையற்றவர் அவனுக்கு நன்றி கூறினார் .


| | |
|---|---|
| 1. மறுபக்கத்தை | 4. வாகனங்கள் |
| 2. காலை | 5. சாலையை |
| 3. கையை | 6. உதவி |

7. கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

விளம்பரத்தைப் படி .

# சின்னஞ்சிறு பிராணிகளைக்

## காணவாருங்கள்




மீன்காட்சி சாலையிலிருந்து கொண்டு வரப்பட்ட கடல் பிராணிகள்

சிங்கையின் பல பூங்காக்களை தங்கள் இருப்பிடமாகக் கொண்ட சிறிய பிராணிகள்

பறவைப் பூங்காவின் வண்ணப்பறவைகள்

அனைத்தையும் ஒரே இடத்தில் காணும் வாய்ப்பை
நழுவ விடாதீர்கள்!

குடும்பத்தோடு சென்றால் நுழைவுக் கட்டணத்திலிருந்து
50% தள்ளுபடி!



*ஜூன் மாத சிறப்புக் கழிவை*
நழுவ விடாதீர்கள் !

நண்பகலுக்குள் காட்சிகளைக் காண வந்தால்
ஒரு புகைப்படத்தை இலவசமாக எடுத்துக் கொள்ளலாம்

விலங்கியல் உலகம்
உங்கள் குடும்பத்தோடு சென்றுவர ஒரு சிறப்பான இடம்.
*சிற்றுண்டியும் உண்டு*

கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான மிகச் சரியான விடையை எழுது. ( 5 ம.எ. )

31. ______________________ வண்ணப்பறவைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன .

32. ______________________ சென்றால் நுழைவுக் கட்டணத்திலிருந்து தள்ளுபடி கிடைக்கும் .

33. இந்தச் சிறப்புக் கழிவு ______________________ மாதத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது .

34. ______________________ வருபவர்களே இலவசமாக புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம் .

35. விலங்கியல் உலகிற்கு வருபவர்களுக்கு ______________________ உண்டு .

| | |
|---|---|
| மீன்காட்சி சாலையிலிருந்து | ஜூன் |
| பறவைப் பூங்காவிலிருந்து | பிற்பகலுக்குள் |
| சின்னஞ்சிறு பிராணிகள் | சிற்றுண்டி |
| குடும்பத்தோடு | நண்பகலுக்குள் |

8. சுயவிடைக் கருத்தறிதல்

கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படிக்கவும் .

ஓர் இனிமையான காலைப் பொழுதில் மாலா தன் காலைக்கடன்களை முடித்துவிட்டு உடற்பயிற்சி செய்ய தயாராகிக் கொண்டிருந்தாள். அப்போது, ஏதோ புகை வாசம் வந்தது. அவள் திரும்பிப் பார்த்தாள்.

அண்டை வீட்டிலிருந்து புகை வருவதைக் கவனித்தாள். அவள் அந்தப் புகையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தாள். உடனே, அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவள் விரைவாக தன் வீட்டினுள் ஓடினாள். அவள் தொலைபேசியின் மூலம் தீயணைப்புப் படையினருடன் தொடர்பு கொண்டாள். அவள் நடந்தவற்றைக் கூறினாள். பின்னர், அவள் அவசர அவசரமாக மற்ற அண்டை வீட்டார்களை உதவிக்கு அழைத்தாள். உடனே, அவர்கள் தீயை அணைக்க வாளிகளில் தண்ணீரை நிரப்பி, அதை வீட்டின் மீது ஊற்றினார்கள்.

அப்போது, மின்னல் வேகத்தில் தீயணைப்பு வண்டி வந்து சேர்ந்தது. தீயணைப்பாளர்கள் சுறுசுறுப்பாகத் தீயை அணைக்க முயற்சி செய்தார்கள். சிறிது நேரத்தில் தீயை அணைத்தார்கள். தீயணைப்பாளர்கள் மாலாவுக்கு நன்றி கூறிவிட்டுச் சென்றனர்.

36. காலையில் மாலா எதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தாள் ?

37. மாலா ஏன் திரும்பிப் பார்த்தாள் ?

38. மாலா யாருடன் தொடர்பு கொண்டாள் ?

39. அண்டை வீட்டார்கள் தீயை அணைக்க என்ன செய்தார்கள் ?

40. தீயணைப்பாளர்கள் எப்படித் தீயை அணைக்க முயற்சி செய்தார்கள் ?

விடைகள் ( Primary 3 - SA 2 2013 )

1. (3) 2. (1) 3. (1) 4. (3) 5. (3)

6. (1) 7. (2) 8. (4) 9. (2) 10. (1)

11. (3) 12. (4) 13. (3) 14. (1) 15. (1)

16. நீ 17. கூடினோம் 18. நிகழ்த்தினார்

19. நான் 20. அலைந்தன

21. (2) 22. (4) 23. (3) 24. (1) 25. (2)

26. (5) 27. (4) 28. (6) 29. (3) 30. (1)

31. பறவைப் பூங்காவிலிருந்து 32. குடும்பத்தோடு

33. ஜூன் 34. நண்பகலுக்குள் 35. சிற்றுண்டி

36. காலையில் மாலா உடற்பயிற்சி செய்வதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

37. ஏதோ புகை வாசம் வந்ததால் மாலா திரும்பிப் பார்த்தாள்.

38. மாலா தீயணைப்புப் படையினருடன் தொடர்பு கொண்டாள்.

39. அண்டை வீட்டார்கள் தீயை அணைக்க வாளிகளில் தண்ணீரை நிரப்பி வீட்டின் மீது ஊற்றினார்கள்.

40. தீயணைப்பாளர்கள் சுறுசுறுப்பாகத் தீணை அணைக்க முயற்சி செய்தார்கள்.